செய்தி வெளியீடு எண்:400 நாள் : 06.08.2016

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 5.8.2016 அன்று தலைமைச் செயலகத்தில், உலக பள்ளிகள் தடகள வாகையர் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவர்கள் சி. அஜீத் குமார் மற்றும் ஆர். நவீன், பள்ளி மாணவியர்கள் எல். சமயஸ்ரீ மற்றும் எஸ். பிரியதர்ஷினி ஆகியோருக்கு 1 கோடியே 20 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத் தொகைக்கான காசோலையினையும், உலக மாற்றுத் திறனாளர்களுக்கான சதுரங்க விளையாட்டுப் போட்டிகளில் 4–வது முறையாக முதலிடம் பெற்ற திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த செல்வி கே. ஜெனிதா ஆண்டோ அவர்களுக்கு 25 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத் தொகைக்கான காசோலையினையும் வழங்கி வாழ்த்தினார்கள்.

அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி வாகை சூடும் தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளைக் ஊக்குவிக்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்லும் தமிழக விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 2 கோடி ரூபாயும்; வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு 1 கோடி ரூபாயும்; வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு 50 லட்சம் ரூபாயும் உயர்த்தி வழங்கியதோடு, ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்பவர்களுக்கு 50 லட்சம் ரூபாயும், வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு 30 லட்சம் ரூபாயும், வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு 20 லட்சம் ரூபாயும் உயர்த்தி வழங்கினார்கள். மேலும் தமிழகத்தைச் சேர்ந்த திறமை மிக்க விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளைக் கண்டறிந்து, அவர்களுக்கு உயரிய பயிற்சி அளித்தல், உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு மையங்கள் அமைத்தல், சிறந்த விளையாட்டு வீரர்கள் மேலும் பல சாதனைகள் புரிய உதவித் தொகை வழங்குதல் போன்ற பல்வேறு சிறப்பான திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

துருக்கியில் டிராப்ஸான் நகரில் 2016 ஜுலை 11–ந்தேதி முதல் 18–ந்தேதி முடிய உலக பள்ளிகள் தடகள வாகையர் போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டிகளின் போது திடீரென ஏற்பட்ட ராணுவப் புரட்சியின் காரணமாக துருக்கியில் கடினமான சூழல் நிலவியது. இருப்பினும், அக்கடினமான சூழலிலும் தமிழகத்தைச் சேர்ந்த நான்கு மாணவ, மாணவியர் பதக்கங்கள் வென்றுள்ளனர்.

விளையாட்டுத் துறையில் இம்மாணவ மாணவியர் மேன்மேலும் பல சிகரங்களை எட்டுவதற்கு ஊக்கமளிக்கும் வகையில், 100 மீட்டர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கமும், மெட்லே ரிலே போட்டியில் ஆண்கள் பிரிவில் தங்கப் பதக்கமும், 4 x 100 மீட்டர் தொடர் ஓட்டப் போட்டிகளில் வெண்கலப் பதக்கமும் வென்ற சென்னையைச் சேர்ந்த மாணவர் சி. அஜீத் குமாருக்கு 55 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத் தொகை; மெட்லே ரிலே போட்டியில் ஆண்கள் பிரிவில் தங்கப் பதக்கம் வென்ற மதுரையைச் சேர்ந்த மாணவர் ஆர். நவீன்–க்கு 25 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத் தொகை; மெட்லே ரிலே போட்டியில் பெண்கள் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற கோயம்புத்தூரைச் சேர்ந்த மாணவி எல். சமயஸ்ரீ–க்கு 20 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத் தொகை; மும்முறை தாண்டுதல் (Triple Jump) போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் வென்ற சென்னையைச் சேர்ந்த மாணவி எஸ். பிரியதர்ஷினி–க்கு 20 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத் தொகை, என மொத்தம் 1 கோடியே 20 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத் தொகைக்கான காசோலையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கி வாழ்த்தினார்கள்.

மேலும், 2016 ஜுலை 21 முதல் 30–ஆம் தேதி முடிய செர்பியா நாட்டின் நோவி சாட் நகரில் நடைபெற்ற உலக மாற்றுத் திறனாளர்களுக்கான சதுரங்க விளையாட்டுப் போட்டிகளில் 4–வது முறையாக முதலிடம் பெற்ற திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த செல்வி கே. ஜெனிதா ஆண்டோ அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 25 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத் தொகைக்கான காசோலையினை வழங்கினார்கள்.

அப்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், "Heartiest Congratulations. I wish you many more success. I hope you will win more medals and add glory to the country and to our State. Once again, I extend my warmest greetings to all of you. We are all very proud of you and I hope all of you will win many more medals in the future and add more and more glory to the country and to our State." என்று வாழ்த்தினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து உயரிய ஊக்கத் தொகைக்கான காசோலைகளை பெற்றுக்கொண்ட நான்கு பள்ளி மாணவ, மாணவியர் மற்றும் சதுரங்க வீராங்கனை செல்வி கே. ஜெனிதா ஆண்டோ ஆகியோர் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு. பி. பெஞ்சமின், தலைமைச் செயலாளர் முனைவர் பா. இராம மோகன ராவ், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ராஜேந்திர குமார், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 6.8.2016**